2018 ஜூன் 5]

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை உருவாக்குவதைப் போலவே, ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி வருகிறது. கடந்த ஏழு ஆண்டுகளில் 190 கோடி ரூபாய் செலவில் 165 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கைகள் கொண்ட புதிய மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளன. தற்பொழுது, நோயாளிகளுடைய எண்ணிக்கைக்கேற்பவும், தேவையின் அடிப்படையிலும் கருத்துருக்கள் பெறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மலைப் பகுதியை சார்ந்திருக்கக்கூடிய குன்னூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினருடைய கோரிக்கையை அரசு கனிவோடு நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 127, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.க. செல்வம், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.*

127—

வள்ளுவர் கோட்டத்தைப் புதுப்பித்தல்

***16402—திரு. கு.க. செல்வம்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆயிரம் விளக்கு தொகுதி, 110–வது வட்டம், நுங்கம்பாக்கம் பகுதியில் உள்ள வள்ளுவர் கோட்டத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்கின்ற தெய்வப் புலவன் வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, இந்த

[2018 ஜூன் 5

மண்ணுலகில் தனக்கென வாழாமல் பிறருக்காக தவ வாழ்வு வாழ்ந்து, இன்றைக்கு விண்ணுலகத்திலே தெய்வமாக இருந்து எங்களை வழிநடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.க. செல்வம் அவர்கள், தங்களுடைய தொகுதியிலே அமைந்திருக்கின்ற வள்ளுவர் கோட்டம் புதுப்பிக்கப்படுமா என்ற வினாவை எழுப்பியிருக்கின்றார். விரைவிலே வள்ளுவர் கோட்டத்தை நல்ல முறையில் புதுப்பிக்க அரசு ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.க. செல்வம் அவர்கள்.

திரு. கு.க. செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகச் செயல் தலைவர் தளபதி அவர்களை வணங்கி, திருவள்ளுவருக்கு பெருமை சேர்க்கும் வகையாக, சென்னை, ஆயிரம் விளக்கு தொகுதியில், நுங்கம்பாக்கம் பகுதியில் அமைந்துள்ள வள்ளுவர் சிலைக்கு, தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் கட்டப்பட்ட வள்ளுவர் கோட்டம் மிக மிக பாழடைந்துள்ளது. அரசு பராமரிப்புப் பணிகள் ஏதும் செய்யப்படவில்லை. இந்த நிலையில் 'வர்தா' புயலின்போது ஏற்பட்ட பேரிழப்பிற்கு மத்திய அரசு நிதியொதுக்கியுள்ளதா, அல்லது சிறப்பு நிதி ஒதுக்கியாவது வள்ளுவர் கோட்டத்தைப் பழுதுபார்க்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வான்புகழ் கொண்ட தெய்வப் புலவர் வள்ளுவரின் அடையாளச் சின்னமாக விளங்குகின்ற வள்ளுவர் கோட்டம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல பாழடைந்த நிலையில் இல்லை. மிகச் சிறப்பான முறையிலே பராமரிக்கப்பட்டு வருகின்றது. சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள வள்ளுவர் கோட்டத்தில் 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ரூபாய் 11.50 இலட்சம் செலவிலே பராமரிப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

2018 ஜூன் 5]

சொன்னதைப்போல, 'வர்தா' புயல் வந்த நேரத்திலே, புயல் மழையால் சேதமடைந்த சுற்றுச் சுவர் கடந்த நிதியாண்டிலே 10 இலட்சம் ரூபாய் செலவிலே புதுப்பிக்கப்பட்டு, தரமாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஒவ்வொரு ஆண்டும் வள்ளுவர் கோட்டத்தில் உள்ள சிற்பத் தேரின் தொங்கல் துணிகள், புதிய துணிகளாக மாற்றப்பட்டு வருகின்றன. மேலும், சென்னை மாநகரின் முக்கியப் பகுதியாக உள்ள வள்ளுவர் கோட்டத்தை நல்ல முறையில் பராமரிக்க நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மட்டுமல்ல, சமூக ஆர்வலர்கள் மற்றும் பல்வேறு தரப்பினர்களிடமிருந்து வந்த கோரிக்கையின் அடிப்படையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். வள்ளுவர் கோட்டத்தைப் புதுப்பிப்பது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளார்கள். துறையின் சார்பாக ஆய்வுக் கூட்டம் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. இந்தத் துறையின் மானியக் கோரிக்கை வருகின்றபோது இதுபற்றிய விரிவான அறிக்கை வரவிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.க. செல்வம் அவர்கள்.

திரு. கு.க. செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 11.50 இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். இப்போது, நிப்பான் கம்பெனியைச் சார்ந்தவர்கள் பெயின்ட் அடித்து, கல்லூரி மாணவர்கள் எல்லாம் சேர்ந்து வள்ளுவருடைய திருக்குறளை அங்கே எழுதியிருக்கின்றார்கள். அதேபோன்று, வர்தா புயலின் போது ஏற்பட்ட பாதிப்பால் வள்ளுவர் கோட்டம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அந்தப் பணிகளுக்கு ரூபாய் 50 இலட்சமாக உயர்த்தி பணிகளை வேகப்படுத்தி செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை இந்த நேரத்தில் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்வதோடு, பராமரிப்பு, பாதுகாப்பு இல்லாத காரணத்தினால் சமூக விரோதச் செயல்கள் அங்கு நடைபெறுவதோடு, பொது மக்களுக்குப் பாதுகாப்பு

இல்லாத நிலை உருவாகியிருக்கிறது. எனவே, வள்ளுவர் கோட்டத்தினுடைய பாதுகாப்பு கருதி, காவலை பலப்படுத்தித் தருமாறு கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, வள்ளுவர் கோட்டம் பகுதியிலே சுற்றுச் சுவர் அமைக்கப்பட்டு, சுற்றுச் சுவர்கள் எல்லாம் வர்ணம் பூசப்பட்டு, அந்த சுற்றுச் சுவரிலே வள்ளுவருடைய திருக்குறள் எல்லாம் எழுதப்பட்டு இருக்கின்றன. தனியார் கல்லூரி மாணவர்கள் அந்தப் பணிகளைச் செய்வதற்கும், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் யார் முன்வந்தாலும் அதற்கு அனுமதி அளித்ததும் அரசுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல அங்கே சமூக விரோதச் செயல்கள் நடைபெறுகின்ற நிலை இல்லை. ஏனென்று சொன்னால், மிகச் சிறப்பான முறையிலே பராமரிக்கப்பட்டு அங்கே உள்ள பணியிடங்களெல்லாம் முழுவதுமாக நிரப்பப்பட்டு நல்ல முறையிலே பராமரிக்கப்பட்டு வருவதோடு மட்டுமல்லாமல், தொடர்ந்து அங்கே நிகழ்ச்சிகள், பொருட்காட்சிகள் நடத்துவதற்கு அரசு உரிய அனுமதி தந்து, நல்ல நிகழ்வுகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையைவிட, அவர் எதிர்பார்த்ததைவிட இன்னும் அதிகமாக வள்ளுவர் கோட்டம் விரைவிலே புதுப்பிக்கப்படும் என்ற நல்ல தகவல் விரைவில் வரவிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள்.

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை அண்ணா நகரில் அமைந்துள்ள தமிழறிஞர் தேவநேயப் பாவாணரின் நினைவு மண்டபத்தின் சுற்றுப்புறம் பராமரிப்பின்றி இருக்கிறது. மேலும், அதிலே இருக்கிற சிறு நூலகத்தை விரிவுபடுத்த வேண்டிய அவசியம் இருக்கின்றது.

2018 ஜூன் 5]

ஆகவே, அங்கே கூடுதல் பணியாளர்களை நியமனம் செய்ய வேண்டியும், பராமரிப்பு செய்ய வேண்டியும் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதோடு, அதற்கு அவர் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை அண்ணா நகரிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே இருக்கின்ற தேவநேயப் பாவாணரின் மணிமண்டபம் மிகச் சிறப்பான முறையிலே பராமரிக்கப்பட்டு வருகின்றது. தமிழ் மொழிக்காக திருநெல்வேலி மாவட்டத்திலே சங்கரன்கோவில் அருகில் பெரும்பத்து என்ற கிராமத்திலே ஞானமுத்து தேவேந்திரர்–பரிபூரணம் அம்மையார் என்போருக்கு 7–2–1902–ல் மகனாகப் பிறந்த அவர் ஐந்தாவது வயதிலே பெற்றோரை இழந்தவர். யங் துரைமகனாரின் உதவியால் கல்வி கற்றார். ஆசிரியர் பணியில் இருந்துகொண்டே 1924–ல் மதுரை தமிழ்ச் சங்க பண்டிதர் பட்டமும், 1926–ல் நெல்லை தென்னிந்திய தமிழ்ச் சங்கப் புலவர் பட்டமும், சென்னைப் பல்கலைக்கழகத்தில் வித்வான் பட்டமும் பெற்றார். சேலம் நகராட்சிக் கல்லூரியிலே தமிழ்த் துறைத் தலைவராக 12 ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றினார். 1956–ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே 5 ஆண்டுகள் திராவிட மொழி ஆராய்ச்சித் துறை ஆய்வாளராகவும், 1974–ல் தமிழக அரசு தொடங்கிய செந்தமிழ் சொற்பியல் அகர முதல இயக்கத்தின் இயக்குநராகவும் பணிபுரிந்தவர். மொழியியல் ஆய்வு, ஒப்பியல் மொழி நூல் போன்ற சொல் ஆராய்ச்சிகள் செய்து 37 நூல்களை எழுதியவர். இத்தனை சிறப்புகளையும் உடைய அவருக்கு சிறப்பு செய்ய வேண்டுமென்று சொல்லி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு அவருக்கு பல்வேறு வழிகளிலே சிறப்பு செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டதன் அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர், மாவட்ட ஆட்சித் தலைவர், அங்கேயுள்ள 2 மாவட்டங்களின் அமைச்சர்கள் எல்லாம் சென்று தேவநேயப் பாவாணருக்கு சிறப்பு செய்கின்ற நிகழ்வு அரசு சார்பில் சிறப்பாக நடத்தப்பட்டது. மாண்புமிகு உறுப்பினரும் அந்த நிகழ்விலே கலந்துகொண்டார். ஆகவே, சுற்றுப்புறம், சுற்றுச் சுவர் மிகவும் சிறப்பாக*

பராமரிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கை போலவே சமூக ஆர்வலர்களிடமிருந்தும் அந்த நூலகத்தை விரிவுபடுத்த வேண்டுமென்ற பல கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. அது அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. எனவே, விரைவிலே அந்த நூலகம் விரிவாக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 128, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

128—

அடிப்படை வசதிகள்

***4424—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, திருவாதவூரில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு மறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, கழகத்தினுடைய இணை ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், கழகத்தினுடைய ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.*

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதி, திருவாதவூரில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா என்ற கேள்விக்கு பதிலளிக்கிறேன். மதுரை—திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் மதுரையிலிருந்து சுமார் 16 கிலோ மீட்டர் தொலைவில் ஒத்தக்கடை அருகில்